<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>
<u>ஜெயங்கொண்டம்.</u>
<u>C.C.No.137 /2022</u>

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–02, திரு.பஞ்சநாதன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பஞ்சநாதன் | வயது | : | 76 /26 |
| த/பெ/ க.பெ./ | : | ராஜமாணிக்கம் | தொழில் | : | **விவசாய வேலை** |
| ஊர் | : | **கோடங்குடி** | நிலை | : | LW02/PW02 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் கோடங்குடியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன மணிகண்டனை தெரியும். அவர் எங்கள் ஊரில் தச்சு வேலை செய்யும் அன்பழகன் என்பவரின் மருமகன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊர்க்காரர். சுமார் 23.12.2021 அன்று காலை சுமார் 09.30 மணியளவில் நான் என்னுடைய சைக்கிளில் மருத்துவமனைக்கு செல்வதற்காக ஜெயங்கொண்டம் – கும்பகோணம் சாலையில் சென்று கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் இருசக்கர வாகனத்தில் மணிகண்டன் சென்று கொண்டிருந்தார். ரோட்டின்

நடுவே கடலையை காய வைத்து அதன் அருகில் வைத்திருந்த கட்டையில் மணிகண்டன் சருக்கி விழுந்து விட்டார். நான் அருகில் சென்று பார்த்தபோது மணிகண்டன் இரத்தத வெள்ளத்தில் இருந்தார். நான் உடனடியாக அவரது மனைவிக்கு சொன்னேன். அவரை தூக்கி பார்த்தபோது உயிர் இல்லை. ஆஜர் எதிரி ரோட்டில் கடலையை காய வைத்து அருகில் கட்டையை வைத்திருந்ததால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு/வி இல்லை.**

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.